# யோபுடைய சரித்திரம்

**- Pastor. Gabriel Thomasraj**

## "யோபுடைய சரித்திரம்" என்று பெயர் பெற காரணம்

- எபிரேய மொழியில் யோபு என்றால் "உபத்திரவபடுத்தப்பட்ட ஒருவன"

- அரபு மொழியில் யோபு என்றால் "மனம் வருந்தின ஒருவன்"

- இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ள எபிரேய மொழிநடையை கொண்டு பார்க்கும்போது பழைய ஏற்பாட்டுப்புத்தகங்களில் இந்தப்புத்தகமே மிகப்பழைமையானது என்று சில வேதஅறிஞர்கள் கணிக்கிறார்கள்.

- யோபு முதல் உன்னதப்பாட்டு வரையுள்ள 5 கவிதை புத்தகங்களில் யோபுடைய சரித்திரம் 1வது புத்தகமாக வைக்கப்பட்டுள்ளது

- எபிரேய கவிதைகளில் இந்தப் புத்தகம் மிகச்சிறந்த கவிதை நூலாக கருதப்படுகிறது.

- யாரால் எழுதப்பட்டது என்பது தெரியவில்லை. யோபுவே தனது அனுபவத்தை பதிவுசெய்திருக்கலாம், அல்லது இன்னாரென்று அறியப்படாத ஒருவர் இதை எழுதியிருக்லாம்.

- அதிகாரம் 42
- வசனங்கள் 1070

## யோபுடைய சரித்திரம் - வேதாகம வரலாற்றின் தன்மை

- இந்தப் புத்தகத்தின் ஆரம்பமும் இறுதியும் வேதாகமத்தின் ஏனைய வரலாற்று புத்தகங்களோடு ஒத்திருக்கிறது (யோபு 1:1ஐயும்,1சாமு1:1, லூக்கா 1:5 ஒப்பிட்டுப் பார்க்கவும்).

- வேதாகமங்களின் மற்றப் புத்தகங்களில் யோபுவின் பெயர் குறிப்பிடப்படுகிறது.

- எசேக்கியேல் 14:14,20 (வச 14)அப்பொழுது நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள்

நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

- யாக்கோபு 5:10-11 என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே.

- பவுல் 1கொரி 3:19ல் யோபு 5:13ஐ மேற்கோள்காட்டி அது வேதவசனந்தான் என்று அங்கீகரிக்கிறார்.

- யோபு 31:33ல் ஆதாமைப்பற்றி குறிப்பிடப்படுவதால் மோசே ஆதியாகமத்தை எழுதுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே ஆதாமும், ஏவாளும் அறியப்பட்டிருந்தார்கள் என்பது புலனாகிறது.

## யோபின் புத்தகத்தின் வரலாற்றுப் பின்னணி

வேதஅறிஞர்கள் யோபின் புத்தகத்தின் காலத்தை முற்பிதாக்களின் காலமாகிய கிட்டதட்ட கிமு 2100-1900 காலத்தை சேர்ந்தது என்று கணிக்கிறார்கள்.

அதற்கான காரணங்கள் சில......

- யோபுவின் செல்வம் அவனது கால்நடைகளைக்கொண்டு அளவிடப்பட்டது (1:3,42:12). ஆனால் ஆபிரகாமின் செல்வம் பொன்னையும், வெள்ளியையும் கொண்டு அளவிடப்பட்டது (அதி 12:16)

- முற்பிதாக்களைபோல யோபுவும் தேவனுக்கு அவரது தனித்துவமான பெயரான "எல்ஷடாய்" (சர்வ வல்லமையுள்ள தேவன்) என்னும் பெயரை பயன்படுத்துகிறார்.

- இந்தப் புத்தகத்தில் இஸ்ரவேல். எகிப்திலிருந்து யாத்திரை, மோசேயின் நியாயப்பிரமாணம், ஆசரிப்புகூடாரம் ஆகிய எதுவும் குறிப்பிடப்படவில்லை.

- ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோர் ஆசாரியனில்லாமல் பலிசெலுத்தி யதுபோல யோபும் பலிசெலுத்துகிறார். நியாயப்பிரமாணம் வழக்கத்திற்கு வந்தபின்னர் இவ்வாறு செய்திருக்கமுடியாது (லேவி 4:10, 27:8)

- யோபு 42:16ல் யோபுவின் துன்பத்தின் நாட்களுக்கு பின் அவர் மேலும் ஆண்டுகள் உயிருடன் இருந்தார் என்று பார்க்கிறோம். அவரது வாழ்க்கைக் காலம் 210 ஆண்டுகளாயிருக்கலாம். இந்த நீண்ட வாழ்க்கைக்காலம் ஆபிராமின் தகப்பனான தேராகு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியயோரின் நீண்ட வாழ்க்கைக்காலத்திற்கு ஒத்திருககிறது.

# யோபின் நண்பர்களின் வரலாற்றுப் பின்னணி

யோபுவை காணவும் அவனுக்கு ஆறுதல் கூறவும் வந்த மூன்று நண்பர்கள்

1.தேமானியனான எலிப்பாஸ் -தேமான் ஏசாவின் பேரன் (ஆதி 36:10,11)
2. சூகியனான பில்தாத் -சூவா ஆபிரகாமின் குமாரன் (ஆதி 25:2)
3. நாகமாத்தியனான சோப்பார் நாகமா வடஅரேபியாவில் உள்ளது 4.பூசியனாகிய எலிகூ பூஸ் ஒரு அரபிய கோத்திரம் (ஆதி 22:21)

## சம்பவ விபரிப்பின் வடிவங்கள்

இந்த புத்தகத்தின் சம்பவங்களின் விபரிப்பு 4 வெவ்வேறு வடிவங்களில் இருக்கிறது.

**1.** முன்னுரை **- Prologue**

- 1:1-5 உத்ஸ் தேசத்தில் யோபுவின் அமரிக்கையும். செழிப்பும் 1:6-12- கர்த்தருடைய சந்நிதியில் சாத்தான் யோபுவை குற்றப்படுத்துதல்
- :13-22 உத்ஸ் தேசத்தில் யோபுவின் பிள்ளைகளும் செல்வமும் அழிதல்

கர்த்தருடைய சந்நிதி: கர்த்தரும் சாத்தானும்

- 27-10 - கர்த்தருடைய சந்நிதி: கர்த்தரும் சாத்தானும்
- 2:11-13 - யோபுவை காணவும் அவனுக்கு ஆறுதல் கூறவும் வந்த மூன்று நண்பர்கள்

**2.**உரையாடல் **- Dialogue**

- யோபின் துன்பத்திற்கான மர்மம் இன்னதென்று அறியாததால் அவனது மூன்று நண்பர்களும் அதற்கான மூலகாரணத்தை அவர்களாகவே ஊகிக்கிறார்கள். தேமானியனான எலிப்பாஸ் யோபு அவனது பாவங்களுக்காக தண்டிக்கப் படுகிறான் என்ற கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகிறான்.

- குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ? (4:7)

- சூகியனான பில்தாத் என்னும் இரண்டாவது நண்பனும் கிட்டதட்ட இதே போன்ற கருத்துடையவனாகவேயிருக்கிறான். இதோ, தேவன் உத்தமனை வெறுக்கிறது

- மில்லை. பொல்லாதவர்களுக்குக் கைகொடுக்கிறதுமில்லை. (8:20) நாகமாத்தியனான சோப்பாரின் வார்த்தைகளும் இதையே வெளிப்படுத்துகிறது.

- உம்முடைய கையிலே அக்கிரமம் இருந்தால், அதைத் தூரத்தில் அகற்றிவிட்டு, அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்கவொட்டாதிரும்.அப்பொழுது உம்முடைய முகத்தை மாசில்லாமல் ஏறெடுத்து, பயப்படாமல் திடன் கொண்டிருப்பீர்....அப்பொழுது உம்முடைய ஆயுசுகாலம் பட்டப்பகலைப்பார்க்கிலும் பிரகாசமா யிருக்கும் (11:14-15,17)

**3.** தனியுரை **Monologue**

- அதி 33.37 ; எலிகூ
- 38:1-42:6 - கர்த்தர்

**4.** முடிவுரை **- Epilogue**

- 42:7-17 - ஊத்ஸ் தேசத்தில் யோபுவின் ஆசீர்வாதம் இரட்டிப்பாதல்

# யோபுடைய சரித்திரத்தின் சுருக்கம்

யோபுவின் வேதனை அதி **1-3**

- யோபுவின் செல்வம் (1:1-5)
- யோபுவின் துன்பம் (1:6-2:13)
- யோபுவின் குழப்பம் (அதி 3)

யோபு தனது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தல் அதி **4-37**

*முதலாவது சுற்று **(**அதி **4-14)**

- 1.எலிப்பாஸ் (அதி 4-5) யோபுவின் பதிலுரை (அதி 6-7)
- 2.பில்தாத் (அதி 8) யோபுவின் பதிலுரை (அதி 9-10)
- 3.சோப்பார் (அதி11) -யோபுவின் பதிலுரை (அதி 12-14)

*இரண்டாவது சுற்று **(அதி 15-21)**

- 1.எலிப்பாஸ் (அதி 15) யோபுவின் பதிலுரை (அதி 15-21)
- 2. பில்தாத் (அதி.18) -யோபுவின் பதிலுரை (அதி 19)
- 3.சோப்பார் (அதி20) -யோபுவின் பதிலுரை (அதி 21)

* மூன்றாம் சுற்று அதி **22-31)**

- 1.எலிப்பாஸ் (அதி 22) - யோபுவின் பதிலுரை (அதி 23-24)
- 2.பில்தாத் (அதி 25) யோபுவின் பதிலுரை (அதி 26-31)

*இளைஞனான எலிகூவின் உரை **(அதி 22-31)**

- 1.யோபுவின் நண்பர்களின் கருத்தோடு முரண்படுதல் (அதி 32 )
- 2. யோபுவின் கருத்தோடு முரண்படுதல் (அதி 33)
- 3.தேவனின் நீதியையும், நன்மையையும், மகத்துவத்தையும் பறைசாற்றுதல் (34-37)

யோபுவின் விடுதலை **(அதி 38-42)**

*தேவன் யோபுவை தாழ்மைப்படுத்துதல் **(38:1-41:34)**

- 1. யோபுவிடம் கேட்ட பதிலளிக்கமுடியாத மாபெரும் கேள்விகள் வாயிலாக (38:1-41:34)
- 2.யோபு காரியங்களை விளங்கிக்கொள்ளமுடியாத தனது இயலாமையை ஒத்துக்கொண்டதன் வாயிலாக (42:1-6)

*தேவன் யோபுவை கனப்படுத்துதல் **(42:7-17)**

- 1.யோபுவை விமர்சித்தவர்களை தேவன் கடிந்துகொள்ளுதல் (42:7-10)
- 2. யோபுவின் இழப்பை இரட்டிப்பாக தேவன் மீளக்கொடுத்தல் (42-11-17)

# வேதனை குறித்த கேள்வி

- இது வறுமையில் இருந்து செழிப்புக்கான கதையல்ல. மாறாக செழிப்பிலிருந்து வறுமையான உண்மைச் சம்பவம்.

- -காலம்காலமாக கேட்கப்பட்டுவரும் "நல்லவர்களுக்கு தீமைகள் வருவதேன்?" என்ற கேள்வியை இந்தப் புத்தகம் அலசி ஆராய்கிறது.

- சாத்தான் தேவனிடத்தில் வைத்த சவாலையும், அதற்கு தேவன் அனுமதித்தையும், நாம் அறிந்திருக்கும் பாக்கியத்தை பெற்றதுபோல யோபு பெறவில்லை. அவனுக்கு அது தெரியப்படுத்தபடவேயில்லை.

- -காலம்காலமாக நம்பப்பட்டுவரும், "நன்மையும் தீமையும் அவனனவன் செய்யும் வினையின் பயன்'" என்ற கருதுகோளுக்கான நேரடியான சவாலாக இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

  - a யோபு காம இச்சை கொண்டவனாக இருக்கவில்லை 31:1-4
  - b. யோபு பொய்சொல்லி ஏமாற்றவில்லை 31:5-8
  - c. யோபு விபசாரம் செய்யவில்லை 31:9-12
  - d.யோபு தனது வேலைக்காரர்களுக்கு உதவி செய்யாமல் இருக்கவில்லை 31:13-15
  - e யோபு ஏழைகள், தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யாமல் இருக்கவில்லை 31:16-23
  - f.யோபு தனது ஐசுவரியத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை 31:24-25
  - g.யோபு விக்கிரக வழிபாடு செய்யவில்லை 31:26-28
  - h.யோபு தனது எதிரிகளை அநியாயமாய் நடத்தவில்லை 31:29-30
  - i யோபு உலோபியாக இருக்கவில்லை 31:31-32
  - j. யோபு தன் பாவங்களை மறைக்கவில்லை 31:33-34
  - k.யோபு தேவன் தன்னை கேட்ககூடாதென்று விரும்பவில்லை 31:35-37
  - l. யோபு தனது பண்ணையாட்களை வஞ்சிக்கவில்லை 31:38-40

- யோபுவிற்கு கொடுக்கப்பட்ட பதில்கள் இந்தப் புத்தகத்தின் வாசகனை திருப்தி செய்யலாம் அல்லது செய்யாமல் போகலாம்.
-
- வேதனையை தேவன் அனுமதிப்பதற்கு தகுந்த காரணங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை அவர் நமக்கு வெளிப்படுத்தாமலும் போகலாம்.
-
- "இப்படித்தான் செயற்படுவார் அல்லது இப்படித்தான் செயற்பட வேண்டும் என்கிற நமது எண்ணத்தின்படி தேவன் செயற்படுகிறவர் அல்ல" என்ற நிதர்சனத்தை யோபு தனது வாழ்வில் அறிந்து கொள்ளவேண்டியிருந்தது.
-
- இந்த வாழ்வின் பிரச்சினைக்கான தீர்வையோ, விளக்கத்தையோ யோபுவின் புத்தகம் முன்வைக்கவில்லை.

## இது யோபுவின் அனுபவமும், அந்த அனுபவதினால் அவன் சொன்ன பதில்களும்.

- சூழ்நிலைகளை நாம் புரிந்துகொள்ள முடியாத தருணங்களிலும் தேவனை நம்புவதைக் குறித்து தேவன் கற்றுத்தரும் மேலான பாடம்.

- தேவனது செய்கையை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்ற தேவை தேவனுக்கில்லை. அவரது செய்கைக்கான விளக்கத்தை அவர் நமக்கு தரவேண்டிய அவசியமுமில்லை.

- நமது புரிந்துகொள்ளுதலும், சூழ்நிலைகளும் எப்படியிருப்பினும் நாம் அவர் மீது நம்பிக்கை வைத்து நமது வாழ்க்கையில் அவர் கிரியை நடப்பிக்க விட்டுக்கொடுப்பதே நமக்கான பாடம்.

- இந்த புத்தகத்தில் 330 கேள்விகள் இடம்பெற்றுள்ளன. (ஆதியாகமத்தில் 160 கேள்விகள்)

## வேதனை குறித்த கேள்விக்கான பதில்

- நமக்குத் துன்பங்கள் வருவது ஏன்? யார் அல்லது எது அதற்குக் காரணம் ? தேவன் இதைக்குறித்து ஒன்றும் செய்யாமலிருப்பது ஏன்?

- இந்த கேள்விகளுக்கான பதில்கள் தரப்படவில்லை. எனினும் சில முக்கிய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

1.மனிதாய் இருப்பதினால் இருக்கும் வேதனையின் அனுபவத்தை மனிதனால் விளங்கிக்கொள்ளவோ புரிந்துணரவோ முடியாது.

- மனிதனது கிரகிக்கும் ஆற்றலினால் அவன் தேவனின் செய்கைகளை விளங்கிக்கொள்ள முடியாது தேவனின் செயல்களை இணைத்துப் பார்த்து மனிதனால் முடிவுக்கு வரமுடியாது. சூழ்நிலைகள் எதுவாயினும் தேவன் மேல் நம்பிக்கையாயிருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

2. துன்பங்கள் எப்போதும் பாவத்தின் நேரடி விளைவுகள் அல்ல

- எப்போதும் பாவத்தின் விளைவாகவே துன்பங்கள் வருகின்றன என்பதே யோபுவின் நண்பர்களின் தவறான முடிவு.

- அப்படியல்ல என்பதே இப் புத்தகத்தின் பாடம்.

3.துன்பங்கள் ஒருவனின் ஆவிக்குரிய நிலைக்கான பாராட்டாகவும் இருக்கலாம்

- யோபு எப்படிப்பட்டவன் என்று சாத்தானுக்கு நிரூபிக்க தேவன் யோபுவிற்கு துன்பங்களை அனுமதித்தார். யோபுவின் மேல் தேவன் வைத்த நம்பிக்கை எவ்வளவு பெரியது!

# யோபுவின் புத்தகத்தை ஜாக்கிரதையாக கையாளுதல்!

- யோபுவின் மூன்று நண்பர்களின் உரைகள் பல தவறுகளை கொண்டிருக்கிறது.
- தேவன் ஜனங்கள் துன்பப்பட அனுமதிப்பது ஏன் என்ற அடிப்படையிலேயே சொல்லப்படுகிறது. யோபு ஏதோ தவறை செய்ததினால்தான் இந்த துன்பத்தை அனுபவிக்கிறார் என்பதே அவர்களது மேலோங்கிய கருத்தாக இருந்தது.
- இதன் விளைவாக யோபு தனது தவறை ஒத்துக்கொண்டு தேவனிடத்தில் மனம்வருந்தினால் அவர் அவனை மீண்டும் ஆசீர்வதிப்பார் என்ற கருத்தை திரும்ப திரும்ப வலியுறுத்துகிறார்கள்.
- அவர்களின் இந்த ஆலோசனையை கர்த்தர் கடிந்துகொண்டார். கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி: உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர்மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை.(42:7)
- - இந்த காரணத்தினாலேதான் யோபுவின் புத்தகத்தின் வசனங்களை தனியாக கையாள்வதில் ஜாக்கிரதை காண்பிக்க வேண்டும்.
- யோபுவின் புத்தகத்தின் ஒரு தனி வசனத்தை அதிலும் குறிப்பாக எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் ஆகியோரின் உரைகளிலிருந்து வசனத்தை எடுத்துக்கொண்டு அதிலிருந்து தேவனைக் குறித்த காரியங்களை புரிந்துகொள்ள முயற்சிப்பது புத்தியீனம்.
- அவ்வாறு செய்கிறபட்சத்தில் அது தேவனைக் குறித்த சரியான விளக்கத்தை தரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

# யோபுவின் புத்கத்திலுள்ள சுவாரசியமான அறிவியல் தகவல்கள்

**1.** வான்வெளியின் வெற்றிடம்

- அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார். (26:7) முந்திய காலங்களில் பூமியானது ஒரு பெரிய மிருகத்தின் மீதோ அல்லது ஒரு இராட்சசனின் மீதோ வைக்கப்பட்டருப்பதாவோ அல்லது புராண இதிகாசங்களின்படி

மோட்சத்தையும், உலகையும் பிரிக்கும் தூண்களை தனது தோள்களில் அட்லஸ் என்னும் கடவுள் தாங்கியிருக்கிறார் என்றும் நம்பினார்கள்.

**2.** விரிந்திருக்கும் வானம்

- அவர் ஒருவரே வானங்களை விரித்து, (9:8)
- 20ம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் ஐயன்ஸ்டைன் உட்பட பல விஞ்ஞானிகள் பிரபஞ்சம் நிலையானது என்று நம்பினார்கள். ஈர்ப்புவிசையினால் அவை அழிந்துபோகும் என்று வேறுசிலர் நினைத்தார்கள்.
- ஆனால் 1929ல் எட்வின் ஹபிள் என்ற வானவியல் ஆராய்ச்சியாளர் தூரத்திலுள்ள விண்மீன்கூட்டங்கள் பூமியை விட்டு விலகிச்செல்வதையும் எவ்வளவு தூரமாய் விலகிச் செல்கின்றனவோ அவ்வளவு வேகமாகவும் விலகிச்செல்வதை கண்டுபிடித்தார்.
- இந்த கண்டுபிடிப்பு வானவியல் ஆராய்ச்சியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

**3.** பூமியின் சுழற்சி

- பூமி முத்திரையிடப்பட்ட களிமண்போல் (38:12,14)
- காலகாலமாக அறிவியலாளர்கள் பிரபஞ்சத்திற்கு பூமியே மையம் என்ற கோட்பாட்டை நம்பினார்கள்.
- சூரியன் பூமியை சுற்றி வருவதுதான் பகல், இரவுக்கான காரணம் என்று நம்பினார்கள்.
- இன்று பூமியின் சுழற்சியே சூரிய உதயமும் அஸ்தமனமும் என்பது நமக்கு தெரியும்.
- இந்த வசனங்களில் சொல்லப்பட்ட ஒப்புமை என்பது குயவனின் திரிகையில் இருக்கும் களிமண் பாண்டம் போல பூமியின் சுழற்சி இருக்கிறது.
- யோபுவின் புத்தகத்திலுள்ள சுவாரசியமான அறிவியல் தகவல்கள்

**4.**வீண்மீன்களின் ஈர்ப்பு பண்புகள்

- அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ?(38:31) அறுமீன் நட்சத்திரங்களின் சேர்க்கை ஈர்ப்பு விசையால் இணைக்கப்பட்டிருக்கிறது.

மிருகசீரிஷத்தின் நட்சத்திரங்களின் சேர்க்கை ஈர்ப்பு விசை குறைவால் விலகியிருக்கிறது.

**5.** கடலின் அடியில் ஊற்றுக்கள்

- நீ சமுத்திரத்தின் அடித்தலங்கள்மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் உலாவினதுண்டோ? (38:16) பூமியின் ஆழத்திலிருந்து வெளிப்படும் எரிகுழம்பின் தாக்கத்தால் கடலின் படுகையில் வென்னீர் ஊற்றுகள் உருவாகி அதைச் சுற்றியுள்ள குளிர்ந்த கடல்நீரை சூடாக்குகின்றன.

- இத்தகைய வென்னீர் ஊற்று ஈக்குவடார் நாட்டின் கடற்பகுதியில் 2.5 கிமீ ஆழத்தில் 1977ல் கண்டுபிடிக்கப்பட்டது.

**6.** காற்றிக்கும் எடையுண்டு

- அவர் காற்றுக்கு அதின் நிறையை நியமித்து,(28:25) 1600ம் அண்டிலேதான் அறிவியல் இதை கண்டுபிடித்தது

**7.** ஒளிக்கும் வழியுண்டு **(38:19,35)**

- வெளிச்சம் வாசமாயிருக்கும் இடத்துக்கு வழியெங்கே?(38:19)

- நீ மின்னல்களை அழைத்தனுப்பி, அவைகள் புறப்பட்டுவந்து: இதோ, இங்கேயிருக்கிறோம் என்று உனக்குச் சொல்லும்படி செய்வாயோ? (38:35)

- ஒளி ஒரு பாதையில் செல்லுகிறது (மின்காந்த கதிர்வீச்சு) என்பதும் அதன் வேகம் ஒரு வினாடிக்கு 186000 மைல்கள் என்பதும் 1864ல் கண்டுபிடிக்கப்பட்டது.